அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 04/2017

எனது இலக்கம்:- EST-7/ALLOW/04/2060-3
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2017.02.28

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>செய்முறைப் பயிற்சிக்காக பயிலுநர்களை அரச நிறுவனங்களுக்கு இணைத்தல்</u>**

மேற்குறித்த விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட 2000.07.19 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2000 இன் முதலாம் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ள சகல அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 12/2000 மற்றும் அதனை திருத்தியமைக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்ட சகல சுற்றறிக்கைகள் 2017.03.15ஆந் திகதி முதல் இரத்துச் செய்யப்படுவதுடன் அதற்குப் பதிலாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும்.

02. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் கல்வி அமைச்சின் கீழ்க் காணப்படும் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தும் கணனி ஆய்வுகூடங்கள், வலய கணனி வள நிலையங்கள், மாகாண தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையம் போன்ற அரச பயிற்சி நிறுவனங்களில் பாடநெறிகளை பின்தொடர்ந்து தகைமையுடைய மாணவ மாணவிகள் மற்றும் பல்கழைக்கழக பட்டப் பாடநெறிகளை கற்கும் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் வருடங்களில் பட்டத்தினை எதிர்பார்த்திருப்பவர்களுக்கான செய்முறைப் பயிற்சியினைப் பெற்றுக்கொடுப்பதற்காக முன்வைக்கப்பட்ட விண்ணப்பங்களை அங்கீகரிக்கும் அதிகாரம் சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள், மாகாணங்களின்பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

03. பட்டதாரிகள் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் கீழ் பயிலுநர் பயிற்சிக்கு உட்படுத்தப்படுவதில்லை மற்றும்/ அல்லது எவ்வித காரணமும் இன்றிய அடிப்படையில் பயிற்சி பெறும் பயிலுநர்கள் பட்டத்தினைப் பூர்த்தி செய்ததன் பின்னர் பயிற்சியாளர்களாக வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் கூடாது.

04. பயிற்சி பெறும் பயிலுநர்களின் எண்ணிக்கை கூடிய பட்சம் 25 ஆக அல்லது ஒட்டுமொத்த ஊழியர்களின் எண்ணிக்கையின் 10% வீதத்தினர் என்னும் இரண்டில் குறைந்த எண்ணிக்கைக்கு வரையறை செய்தல் வேண்டும்.

05. அதற்கிணங்க, செய்முறைப் பயிற்சியினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உத்தேசித்துள்ள தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் இத்துடன் இணைத்துள்ள மாதிரிப் படிவத்துக்கு ஏற்ப தயாரித்து 2 பிரதிகளைக் கொண்டதாக முழுமைப்படுத்தி திணைக்களம்/ நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் உரிய அதிகாரியிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

06. இங்கு 08 ஆம் அத்தியாயத்தின் கீழ்க் காட்டப்பட்டுள்ள தொழில்நுட்ப வகையைச் சேர்ந்த செய்முறைப் பயிற்சி தவிர்ந்த ஏனைய சகல செய்முறைப் பயிற்சிகளையும் கட்டாயமாக 06 மாத காலத்திற்கு வரையறுக்கப்பட்டிருப்பதுடன், எதுவிதக் காரணம் கொண்டும் அல்லது அக் கால எல்லையினை தாண்டி கொடுப்பனவினை செலுத்துதல் கூடாது.

07. தேவைப்படும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருப்பின் மாத்திரம் பயிற்சியாளர் ஒருவருக்கு நாளாந்தம் ரூபா. 500/- இனைக் கொடுப்பனவாக செலுத்த முடியுமாக இருப்பதுடன், அதற்கு மேலதிகமாக வேறு எதுவித கொடுப்பனவோ அல்லது உழைப்பூதியமோ செலுத்தப்படலாகாது. அவ்வாறே இக்கொடுப்பனவினை செலுத்துவதற்காக பொதுத் திறைச்சேரியின் மேலதிக நிதி ஒதுக்கீட்டினை கோராமல் இருப்பதற்கு நிறுவனத் தலைவர்கள் கவனமாக இருத்தல் வேண்டும்.

08. 06 மாதங்களை விட அதிகளவு செய்முறைப் பயிற்சியினை வழங்கும் பாடநெறிகளாக தற்போது இணங்காணப்பட்டுள்ள தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை மற்றும் அதனுடன் இணைந்த கட்டுநாயக தொழில்நுட்பவியலாளர் பயிற்சி நிறுவனம், மொரட்டுவ பயிலுநர் பயிற்சி நிறுவனம் மற்றும் இலங்கை மோட்டார் இயந்திர பொறியியல் நிறுவனம் ஆகிய நிறுவனங்களில் நடாத்தப்பட்டு வரும் தொழில்நுட்பப் பாடநெறிகள் மட்டுமே தற்போது இனங்காணப்பட்டுள்ளன. அந்தப் பயிற்சிப் பாடநெறிகளின் பரிந்துரைகள் செய்முறைப் பயிற்சிக் கால எல்லையினை மீறுதலாகாது.

09. பயிற்சியாளர்கள் பயிற்சிக்காக நிறுவனமொன்றிற்கு இணைக்கப்படும் போது அவர்களுக்கு நிறுவனத்தின் ஏதேனுமொரு பதவியின் பொறுப்புக்களை அளித்தலாகாது.

10. செய்முறைப் பயிற்சி பெறுநர்களுக்கு அரசினல் நிரந்தர அல்லது நிரந்தரமற்ற ஊழியர்களுக்காக உரித்துடைய எவ்வித சிறப்புரிமைகளுக்கும் உரிமையற்றவர்கள் என எழுத்து மூலம் தெளிவாக அறிவிக்க வேண்டும். மேலும் செய்முறைப் பயிற்சிக்காக தழுவல் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொடுத்தலும் கூடாது.

11. இப்பயிற்சியினைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக குறித்த நிறுவனம் அல்லது பயிற்சி பெறுநருடன் எதுவித உடன்படிக்கைக்கும் உட்படுதல் கூடாது.

12. இச்சுற்றறிக்கை பொது திறைசேரியின் உடன்பாட்டுடன் பிரசுரிக்கப்படுகின்றது.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

# <u>செய்முறைப் பயிற்சியினை வழங்குவதற்கான விண்ணப்பம்</u>

எனது இலக்கம்:…………………..

திகதி:……………………………..

அமைச்சின் செயலாளர்/ மாகாண பிரதம செயலாளர்
மாவட்டச் செயலாளர்

**பகுதி – I**

01.

01:1 அலுவலகம் : …………………………………………………………………………………………………..

01:2 பயிற்சிக்காக இணைக்கப்படும் நிறுவனத்தின் பெயர் : …………………………………………………………...

01:3 அனுப்பும் இலக்கம் மற்றும் திகதி : ………………………………………………………………………………

02. பயிற்சியினை வழங்குவதற்கு எதிர்பார்க்கும் பயிலுநர்கள் தொடர்பான விபரம்

| பயிற்சி பெறுநரின் பெயர் (1) | விடயம் (2) | தொடக்கத் திகதி (3) | முடிவுத் திகதி (4) | காலம் (5) |
|---|---|---|---|---|
| I | | | | |
| II | | | | |
| III | | | | |
| IV | | | | |

03. மேலே பெயர் குறிப்பிடப்பட்ட செய்முறைப் பயிற்சி பெறுநர்களுக்கு கொடுப்பனவுகளை செய்வதற்காக ஒதுக்கீடு உள்ளது / இல்லை.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள பயிலுநர்களுக்கு அதில் குறிப்பிட்டுள்ள கால எல்லைக்கான செய்முறைப் பயிற்சியளிக்க பரிந்துரை செய்கிறேன் / இல்லை. பயிற்சி பெறும் திகதிக்கு ரூபா. 500/- (ஐந்நூறு) இனை கொடுப்பனவாக வழங்குவதற்கு முடியும் / முடியாது.

திணைக்களத் தலைவரின் கையொப்பம்:………………………..

பெயர்:……………………………………………………………

பதவி:…………………………………………………………….

**பகுதி - II**

எனது இலக்கம் : ……………………………………………………

திகதி : ………………………………………………………………….

முதற் பகுதியில் பெயர் குறிப்பிட்டுள்ள பயிலுநர்களுக்கு அதற்கு முன்னர் குறிப்பிட்ட 06 மாதங்கள்/ வருடம் ……………….. காலத்திற்கான செய்முறை பயிற்சியினை வழங்குவதற்காக அனுமதி அளிக்கின்றேன்/ இல்லை. பயிற்சியினைப் பெறும் ஒரு தினத்துக்கு 500/- (ஐந்நூறு) ரூபா விகிதத்தில் வழங்குவதற்கு அங்கீகாரம் அளிக்கின்றேன் / அளிப்பதில்லை.

……………………………………………

அமைச்சின் செயலாளர் / மாகாண பிரதம செயலாளர்
மாவட்ட செயலாளர்